# கொலொக் (Golog)




**Population:**
127,600 (2000)
164,600 (2010)
202,800 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** 10

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Ngolok, Mgolog, Golok, Lhardi, Ngura, Amchok, Rimong, Kangsar, Kanggan, Tsokhar, Ngawa, Gatse, Butsang, Shahrang, Jazza, Ggolo

**மக்கள்தொகை:** 80,000 to 90,000 in China( கி.பி.1982)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** பல

**திபெத்திய புத்தமதம் :** 95%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** GOC

### கிறிஸ்துவத்தின் நிலை




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** கி.பி. 1982 பிப்ரவரியில் நேஷனல் ஜியாக்ரபிக் (National Geographic) அட்டவணையில் 80,000 லிருந்து 90,000 வரையிலான கொலொக் மக்கள் சிங்ஹாய் (Qinghai) மாநிலத்தின் கொலொக் மாகாணத்தின் ஆறு மாவட்டங்களில் வசிப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. கி.பி. 1953 ல் 1,00,343 கொலொக் மக்கள் கொலொக் மாகாணத்தில் வசித்தனர் ஆனால் கி.பி.1964 ல் இந்த எண்ணிக்கை குறைந்து 56,071 ஆகியது. ஆயிரக்கணக்கான கொலொக் மக்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்தனர்; இன்னும் சில ஆயிரம் மக்கள் யுத்தத்தில் மரித்தனர் அல்லது சீன இராணுவத்தால் பட்டினி போடப்பட்டுக் கொல்லப்பட்டனர். கி.பி. 1920 களில் இப்பகுதிக்குச் சென்ற ஒருவர் இவ்வாறு விவரிக்கிறார் "நம்ப முடியாதளவுக்கு அருவருப்பான அழுக்கு மற்றும் தரித்திரம் நிறைந்த ஒரு கொடுமையான, நவீன உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்ட பகுதியிது."

**அடையாளம்:** ஒரு பதிவின்படி கொலொக் என்பதின் பொருள் "தலை பின்புறம் உள்ளோர்". இந்தப்பெயர் பிடிவாதமான முரட்டாட்டமான இவர்கள் குணத்திலிருந்து வந்தது. இது மிகவும் பின்தங்கிய மக்கள் இனமாகும்.

**மொழி:** கொலொக் மொழி பெரும்பாலான திபெத்தியர்களுக்குப் புரியாத மொழியாகும். இது அம்தோ (Amdo) மொழியின் வகையாகும். இருந்தும் இதிலுள்ள வேறுபாடு நிமித்தம் கொலொக் மற்றும் அம்தோ மக்கள் தொடர்பு கொள்வது கடினமாகிறது.

**வரலாறு:** கொலொக் மக்கள் வடக்கு எல்லையைக் காக்கும்படி அனுப்பப்பட்ட திபெத்திய யுத்த வீரர்களுடைய சந்ததியினர் ஆவார்கள். ஏழாம் நூற்றாண்டில் திபெத்தின் ராஜா இப்பொழுதைய கொலொக் மற்றும் கம் மக்களின் முற்பிதாக்களாகிய கொடூரமான யுத்த வீரர்களை மலைப்பாங்கான வடக்கு எல்லையைச் சீன தாக்குதலிலிருந்து காக்கும்படி அனுப்பிவைத்தார். திபெத்திய ராஜ்யம் நிலைகுலைந்தபோது கொலொக் மக்கள் புறம்பான அதிகாரங்களை எதிர்த்து அந்த மலைப்பகுதியிலேயே தங்கிவிட்டனர்.

**பழக்கவழக்கங்கள் :** நாடோடி மேய்ப்பர்களான கொலொக் மக்கள் பிசுக்குள்ள செம்மறியாட்டுத் தோலிலான உடையையும், யாக் தோலிலான காலணியையும், கி.பி. 1900 களில் பிரிட்டிஷ் திபெத்தின் மீது நடத்திய தாக்குதலுக்கு அடையாளமாக நிலைத்திருக்கும் இறகுகளாலான தொப்பியையும் அணிகிறார்கள்.

**மதம்:** பெரும்பாலான கொலொக் மக்கள் திபெத்திய புத்தமதத்தினர் ஆவார்கள். அநேக கொலொக் பெண்கள் 108 பின்னல்களுடைய ஜடை போடுகிறார்கள். திபெத்திய புத்தமதத்தினர் மத்தியில் 108 நல்ல எண்ணாகக் கருதப்படுகிறது.




**கிறிஸ்துவம்:** சில கொலொக் மக்கள் மட்டுமே கிறிஸ்து மற்றும் அவருடைய இரட்சிப்பின் சுவிசேஷத்தைப்பற்றிக் கேட்டிருக்கின்றனர். இவர்கள் எல்லா வெளியுலகத் தாக்கங்களிலிருந்தும் அநேக நூற்றாண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். கி.பி.1921 ல் இவ்வழியாகக் கடந்து சென்ற சில மிஷனெரிகள் சுவிசேஷக் கைபிரதிகளைக் கொடுத்துச்சென்றனர். பின்னாட்களில் இவர்கள் க-கனர்(Kokonor) புத்த மடத்தின் தலைமை பூசாரியான குருங் ஷெரிங்கிடத்திலிருந்து (Kurung Tsering) ஒரு கடிதத்தைப் பெற்றனர் "நான் தாழ்மையான உங்கள் சேவகன் அநேகக் கைப்பிரதிகளைப் பார்த்தேன். அவற்றை நிதானமாகப் படித்தேன் அவை என்னைக் கிறிஸ்துவை விசுவாசிக்க வழிநடத்தின. இத்தனித்தன்மையான கோட்பாடுகள் மற்றும் ஒரே குமாரன் சித்தாந்தங்களில் சிலவற்றை மட்டுமே நான் புரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால் பரிசுத்தாவி மற்றும் அவருடைய குணங்கள் மற்றும் இந்த மத்தத்தின் ஆரம்பம் பற்றி எனக்கு எதுவும் புரியவில்லை. அதினால் சிறிய ஞானமுடைய எழுத்தறிவில்லாத மக்கள் அறிவடையும்படி இம்மதத்தின் சித்தாந்தக் கோட்பாடுகள் பூரணமாக விளக்கப்படுவது மிக அவசியமாகும். மருத்துவ அறிவியலும் மற்றும் ஜோதிட அறிவியலும் அவசியமாகும். இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தேவனின் ஒரே குமாரன் மதத்தை விசுவாசிக்க வேண்டும். மிகவும் ஊக்கமுடன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வேண்டிக்கொள்கிறேன் இக்கடிதத்தை அற்பமாக எண்ணவேண்டாம். நூற்றுக்கணக்கான நமஸ்காரங்களுடன் !"